தினமணி

ஞாயிற்றுக்கிழமை, 25 பிப்ரவரி 2018

# பெண்களுக்கு உயர்கல்வி மிகவும் அவசியம்

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்



பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுடன் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்.

செங்கல்பட்டு, பிப். 24: பெண்களுக்கு உயர்கல்வி மிகவும் அவசியம் என்று தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் கூறினார்.

செங்கல்பட்டை அடுத்த வேதநாராயணபுரம் வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பேசியதாவது: பெண்களுக்கு உயர்கல்வி மிகவும் அவசியம் . இதன்மூலம் பாலின சமத்துவமின்மையை உணர்ந்து அடக்குமுறையை எதிர்க்கவும், சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பை மாற்றி அமைக்கவும் உதவுகிறது.

உயர் கல்வி ஒரு பெண்ணுக்கு வரம் போன்றது. அது பெண்களுக்கு முழுமையான வாழ்க்கையைத் தருவதோடு தன்னம்பிக்கையையும் சுயமதிப்பையும் அளிக்கிறது. இளைய சமுதாயமாக விளங்கும் மாணவர்கள் தான் எதிர்கால இந்தியாவை சமூக பொருளாதாரத்தில் சிறந்த சக்தியாக உருவாக்க முடியும் என்றார் ஆளுநர். இதைத் தொடர்ந்து 2016-ஆம் ஆண்டு தொடங்கி கல்வி கற்று வெளியேறிய 725 மாணவிகளுக்கு ஆளுநர் பட்டங்களை வழங்கினார். இதில் பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப்பெற்ற கணினி பயன்பாட்டியல் மாணவி என்.மாலதி, இயற்பியல் மற்றும் கணினி பயன்பாடு மாணவி ஏ.ஆர்.சாந்தி, ஆங்கில இலக்கிய மாணவி இ.ராதிகா, மென்பொருள் பயன்பாட்டியல் மாணவி பி.ஏக்னஸ் ஆகியோருக்கு தங்கப் பதக்கம் வழங்கி வாழ்த்தினார். பின்னர், பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் முதல் மற்றும் சிறப்புத் தகுதி பெற்ற சுமார் 131 மாணவிகளுக்கும் பட்டம் வழங்கி சிறப்பித்தார். இதைத் தொடர்ந்து, பட்டம் பெற்ற மாணவிகள் உறுதிமொழி ஏற்றனர்.

நிகழ்ச்சிக்கு, வித்யாசாகர் கல்விக் குழுமத்தின் தலைவர் ஹஸ்திமல் சுரானா தலைமை வகித்தார். தாளாளர் விகாஸ் சுரானா வரவேற்றார். சிறப்பு பொருளாளர் சுரேஷ்கன்காரியா, வித்யாசாகர் கல்விக் குழுமத்தின் இயக்குநர் பி.ஜி.ஆச்சார்யா, பல்கலைக்கழக நியமனர் யு.விஷால் குமார் உள்ளிட்டோர் பேசினர். கல்லூரி முதல்வர் ஷாலினி குமார் ஆண்டறிக்கையை வாசித்தார்.

விழாவில், செங்கல்பட்டு சார் ஆட்சியர் ஜெயசீலன், கருநாகராஜன், அரசு மருத்துவக் கல்லூரி முன்னாள் மருத்துவர் ஏ.ஆர். சக்கரவர்த்தி உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவர்கள், கல்லூரிப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சந்தோஷ் ஹதிமானி தலைமையில் டி.எஸ்.பி.க்கள், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
சென்னை (25-2-2018)
ஞாயிற்றுக்கிழமை
மலர் 76
இதழ் 116
வெல்க தமிழ்
ஹேவிளம்பி ஆு மாசி மீ 1
ஹிஜிரி 1439 ஜமாதுல் ஆ




# கல்லூரி பட்டமளிப்பு விழா

செங்கல்பட்டு, பிப்.25-

செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கலைக்கல்லூரி பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது. இதில் கல்வி குழுமத்தின் தலைவர் ஹஸ்திமல் சுரானா தலைமை தாங்கினார். இயக்குனர் ஆச்சார்யா முன்னிலை வகித்தார். பொருளாளர் சுரேஷ்கன்காரியா வரவேற்றார். கல்லூரி முதல்வர் ஷாலினிகுமார் ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோகித் கலந்து கொண்டு பேசினார். பின்னர் அவர், கடந்த 2 ஆண்டுகளில் அந்த கல்லூரியில் படித்து தேர்ச்சி பெற்ற 855 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இவர்களில் பல்கலைக்கழக தரவரிசைப்பட்டியலில் முதலிடம் பெற்ற மாணவி மாலதி (கணினி பயன்பாட்டியல்), சாந்தி (இயற்பியில் மற்றும் கணினிபயன்பாடு), ராதிகா (ஆங்கில இலக்கியம்), ஏக்னஸ் பிரியா (மென்பொருள் பயண்பாட்டியல் துறை) ஆகியோரும் அடங்குவர். பட்டம் பெற்ற மாணவிகள் அனைவரும் உறுதிமொழி ஏற்றனர். விழாவில் பல்கலைக்கழக நியமன முனைவர் விஷால் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

vidhya sagar
WOMEN'S COLLEGE

24th February

# 9th Graduation Day

Chief Guest

**Thiru. Banwarilal Purohit**
Governor of Tamilnadu

The News about this event was published in

राजस्थान पत्रिका

लोकप्रिय हिन्दी दैनिक
दक्षिण भारत राष्ट्रमत







arts.vidhyasagar.in

## विद्यासागर महिला महाविद्यालय में 9वां दीक्षांत समारोह

# शिक्षा मनुष्य में उपयुक्त पूर्णता की अभिव्यक्ति

पत्रिका न्यूज़ नेटवर्क
patrika.com

**चेंगलपेट.** यहां स्थित विद्यासागर महिला महाविद्यालय में शनिवार को नौवां दीक्षांत समारोह आयोजित किया गया। मुख्य अतिथि राज्यपाल बनवारीलाल पुरोहित थे। दीप प्रज्वलन के बाद पत्राचारक विकास सुराणा ने दीक्षांत समारोह के बारे में बताया। विद्यासागर शिक्षण संस्थान के चेयरमैन हस्तीमल सुराणा और कोषाध्यक्ष सुरेश कांकरिया ने मुख्य अतिथि बनवारीलाल पुरोहित का सम्मान किया। निदेशक बृजगोपाल आचार्य ने राज्यपाल का परिचय दिया एवं प्राचार्य डॉ. सी. शालिनी कुमार ने महाविद्यालय की उपलब्धियों बताई एवं वार्षिक रिपोर्ट पेश की।



विद्यासागर महिला महाविद्यालय में आयोजित दीक्षांत समारोह में राज्यपाल ने छात्राओं को डिग्री प्रदान की।



दीक्षांत समारोह में डिग्री के साथ छात्राएं। साथ हैं कॉलेज की अन्य छात्राएं एवं प्रबंधन के सदस्य।

इस मौके पर राज्यपाल ने अपने सिद्धांत दर्शन का हवाला देते हुए महिलाओं को शिक्षित और सशक्त बनाने पर जोर दिया और इस कार्य को उचित परम्परा से सम्पादित करने के लिए विद्यासागर प्रबंधन की सराहना की।

उन्होंने कहा शिक्षा मनुष्य में उपयुक्त पूर्णता की अभिव्यक्ति है। उन्होंने छात्राओं से कहा शिक्षा के माध्यम से प्रशंसनीय नागरिक बनें और और आत्मविश्वास कायम रखते हुए आगे चल कर पुरुषों की चुनौतियों का सामना करें। अपने आपको और शक्तिशाली बनाएं। डिग्री लेने के बाद देश के विकास में अपना योगदान देकर भविष्य सुनिश्चित करें, राष्ट्रसेवा के लिए समर्पित रहने की शपथ लें। जब महिलाएं सशक्त होकर नेतृत्व क्षमता प्राप्त करेंगी तभी देश का भविष्य उज्ज्वल होगा, साथ ही सामाजिक और आर्थिक विकास को बल मिलेगा। उन्होंने कालेज के विश्वविद्यालय में प्रथम रैंक में स्वर्ण पदक पाने वाली सेल्वी एन, मालती, सेल्वी एआर, शांति, सेल्वी राधिका और पी. अग्निश प्रिया को डिग्री, प्रतीक चिन्ह व स्वर्ण पदक देकर सम्मानित किया। इसके साथ ही मद्रास विश्वविद्यालय में द्वितीय से 25 वीं रैंक पाने वाली 29 छात्राओं को डिग्री प्रदान की। साथ ही 609 स्नातक-स्नातकोत्तर छात्राओं को डिग्री दी गई।

समारोह में प्राचार्य ने नियमअनुसार सभी डिग्रीधारी छात्राओं को शपथ दिलवाई। संचालन उपप्राचार्य डा. अरुणा देवी ने किया।

*(कार्यालय संवाददाता)*

ஞாயிறு, பிப்ரவரி 25, 2018

# தி இந்து

Vol. 6 No. 55 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769




செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியின் 9-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, 725 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். விழாவுக்கு வித்யாசாகர் கல்விக் குழுமத் தலைவர் ஹஸ்திமல் சுரானா தலைமை வகித்தார். தாளாளர் விகாஸ் சுரானா, பொருளாளர் சுரேஷ் கன்காரியா, பல்கலைக்கழக நியமனர் விஷால்குமார், கல்லூரி முதல்வர் சி.ஷாலினிகுமார், கல்விக் குழும இயக்குநர் பி.ஜி.ஆச்சாரியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




चेन्नई में शनिवार को विद्यासागर महिला महाविद्यालय के दीक्षांत समारोह के दौरान प्रतिभावान विद्यार्थियों को गोल्ड मेडल एवं प्रमाणपत्र देकर राज्यपाल बनवारीलाल पुरोहित ने सम्मानित किया।

# विद्यासागर महिला महाविद्यालय में 9वां दीक्षांत समारोह संपन्न

**दक्षिण भारत न्यूज नेटवर्क**

**चेन्नई।** चेंगलपेट स्थित विद्यासागर महिला महाविद्यालय में नौवां दीक्षांत समारोह शनिवार को प्रार्थना एवं दीप प्रज्वलन के साथ किया गया। सर्वप्रथम मद्रास विश्वविद्यालय के नियम के अनुसार पत्राचारक विकास सुराणा के दीक्षांत समारोह के आरंभ की घोषणा करते हुए कार्यक्रम का विधिवत संचालन किया। दीक्षांत समारोह में मुख्य अतिथि तमिलनाडु के राज्यपाल बनवारीलाल पुरोहित का सम्मान विद्यासागर शिक्षण संस्थान के चेयरमैन हस्तीमल सुराणा और कोषाध्यक्ष सुरेश कांकरिया द्वारा किया गया। निदेशक बृजगोपाल आचार्य ने राज्यपाल का परिचय देते हुए सभी अतिथियों का अभिनन्दन किया।

प्राचार्या डॉ सी शालिनी कुमार ने महाविद्यालय की वार्षिक रिपोर्ट पढ़ कर उपलब्धियों के विषय में विस्तार से अवगत करवाया। इस मौके पर मुख्य अतिथि बनवारीलाल पुरोहित ने सिद्धांत दर्शन का हवाला देते हुए महिलाओं को शिक्षित और सशक्त बनाने पर जोर दिया और इस कार्य को उचित परम्परा से सम्पादित करने के लिए विद्यासागर प्रबंधन को बधाई दी। उन्होंने स्वामी विवेकानंद के वचनों के अनुसार कहा शिक्षा मनुष्य में उपयुक्त पूर्णता की अभिव्यक्ति है छात्राओं को संबोधित करते हुए कहा शिक्षा के माध्यम से प्रशंसनीय नागरिक बने और आत्म विश्वास कायम रखते हुए आगे चल कर महिलाए पुरुषों की चुनोतियों का सामना करे, अपने को और शक्तिशाली बनाए डिग्री प्राप्त करने के बाद छात्राए भारत के विकास में अपना निजी योगदान देकर अपने भविष्य को सुनिश्चित करे, राष्ट्र सेवा के लिए समर्पित रहने की शपथ लेवे। जब महिलाएं सशक्त होकर नेतृत्व के क्षमता प्राप्त करेंगी देश का भविष्य उज्वल होगा साथ ही सामाजिक और आर्थिक विकास को बल मिलेगा। मुख्य अतिथि ने कॉलेज के विश्वविद्यालय में प्रथम रेंक प्राप्त स्वर्ण पदक प्राप्त करने वाली सेल्वी एन मालती बीसीए, सेल्वी एआर, शांति बीएससी फिजिक्स, सेल्वी राधिका बीए अंग्रेज़ी और पी अग्निस प्रिया बीएससी सॉफ्टवेयर एप्लीकेशन को डिग्री प्रतीक चिन्ह स्वर्ण पदक देकर सम्मानित किया। इसके साथ ही मद्रास विश्वविद्यालय में द्वितीय से **25** रेंक प्राप्त करने वाली छात्राओं का मंच पर सम्मान करने के साथ डिग्री प्रदान की कुल **609** स्नातक स्नातकोत्तर छात्राओं ने क्रम के अनुसार राज्यपाल एवं मद्रास विश्वविद्यालय के कुलपति के हाथों डिग्रिया प्राप्त करने का सौभाग्य प्राप्त किया।

प्राचार्य ने नियम के अनुसार सभी डिग्री प्राप्त करने वाली छात्राओं को शपथ दिलवाई। उपप्राचार्य डा अरुणा देवी ने दीक्षांत समारोह को सफलता पूर्वक संचालित करने में पूर्ण योगदान दिया।

தினமலர்

6 | தினமலர் | சென்னை | ஞாயிறு | 25.2.2018

# வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் விமரிசையான பட்டமளிப்பு விழா




வித்யாசாகர் மகளிர் கல்லூரியில், மாணவியருக்கு பட்டங்களை, கவர்னர் பன்வாரிலால் புரோஹித் வழங்கினார். இடம்: செங்கல்பட்டு.

**செங்கல்பட்டு, பிப். 25–** செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியில், 725 மாணவியருக்கு பட்டங்களை, கவர்னர் பன்வாரிலால் புரோஹித், நேற்று வழங்கினார்.

செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியில், ஒன்பதாம் ஆண்டு பட்டமளிப்பு விழாவுக்கு, கல்விக்குழுமத்தின் தலைவர், ஹஸ்திமல் சுரானா தலைமை வகித்தார்; தாளாளர் விகாஸ் சுரானா முன்னிலை வகித்தார்.

தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோஹித், மாணவியருக்கு பட்டங்கள் வழங்கி, அறிவுரை வழங்கினார்.

முன்னதாக, கல்லூரி முதல்வர் ஷாலனி குமார், ஆண்டறிக்கை வாசித்தார்.

மாணவியர், மாலதி, சாந்தி, ராதிகா, ஏக்னஸ் பிரியா மற்றும் பல்கலைக் கழக தரவரிசைப்பட்டியலில் முதல் மற்றும் சிறப்பு தகுதி பெற்ற, 131 மாணவியருக்கு, பட்டம் மற்றும் சான்றிதழ்களை கவர்னர் வழங்கினர்.

● சென்னை ● ஞாயிறு, பிப்ரவரி 25, 2018

# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

### வித்யாசாகர் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா

# பெண்களுக்கு உயர் கல்வி அவசியம்

## கவர்னர் பன்வாரிலால் புரோகித் பேச்சு




செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் நடந்த 9 ம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோகித் கலந்து கொண்டு 725 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கினார். அருகில் வித்யாசாகர் கல்விக் குழுமத் தலைவர் அஸ்திமல் சுரானா, தாளாளர் விகாஷ் சுரானா, பொருளாளர் சுரேஷ் கன்காரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு, பிப்.25: செங்கல்பட்டு வித்தியாசாகர் மகளிர் கல்லூரியில் 9ம் ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. வித்தியாசாகர் கல்வி குழுமத்தின் தலைவர் அஸ்திமல் சுரானா தலைமை வகித்தார். கல்விக் குழும தாளாளர் விகாஸ் சுரானா, பொருளாளர் சுரேஷ் கன்காரியா, சென்னை பல்கலைக்கழக நியமனர் விஷால்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக, கல்லூரி முதல்வர் ஷாலினிகுமார் வரவேற்றார். கல்விக் குழுமத்தின் இயக்குநர் ஆச்சார்யா சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார். தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரேர்கித் கலந்துகொண்டு 725 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசினார்.

கவர்னர் பன்வாரிலால் பேசுகையில், 2005ம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த கல்லூரி தான் மேற்கொண்ட பணியை செவ்வனே செய்து வருகிறது.

பெண்களுக்கு உயர் கல்வி மிகவும் அவசியம். இதன் மூலம் பாலின சமத்துவமின்மையை உணர்ந்து அடக்குமுறையை எதிர்க்கவும் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பை மாற்றி அமைக்கவும் உதவுகிறது.

உயர் கல்வி ஒரு பெண்ணுக்கு வரம் போன்றது. அது பெண்களுக்கு முழுமையான வாழ்க்கையை தருவதுடன் தன்னம்பிக்கையும் சுயமரியாதையையும் அளிக்கிறது.

இளைய சமுதாயமாக விளங்கும் நீங்கள் தான் எதிர்கால இந்தியாவை சமூக பொருளாதாரத்தில் சிறந்த சக்தியாக உருவாக்க முடியும் என கல்வியின் அவசியம் குறித்துப் பேசினார்.

பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைபெற்ற மாணவிகள் மாலதி, சாந்தி, ராதா, ஆக்னஸ் பிரியா ஆகிய மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார். பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் முதல் மற்றும் சிறப்பு தகுதி பெற்ற 131 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். பட்டம் பெற்ற மாணவிகள் உறுதி மொழி ஏற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு சப் கலெக்டர் ஜெயசீலன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், கல்விக்குழும நிர்வாகிகள் 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.